**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் யுத்தத்திற்குப் பிந்திய பகுதிகளில் சமுதாய அடிப்படை கிராமிய நீர்வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டம் - 2013**

---

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் யுத்தத்திற்குப் பிந்திய பகுதிகளில் சமுதாய அடிப்படை கிராமிய நீர்வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 9154 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் II (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணியின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் யுத்தத்திற்குப் பிந்திய பகுதிகளில் சமுதாய அடிப்படை கிராமிய நீர்வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்ற செயற்திட்டத்தின் மானிய உடன்படிக்கைகளின் படி, நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சு (எம்டபிள்யூஎஸ்டி) செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை (என்டபிள்யூஎஸ்டிபீ) மற்றும் நெடுந்தீவு பிரதேச சபை, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மற்றும் கரைச்சி பிரதேச சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாவுள்ளது. முன்னேற்றப்பட்ட நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகள் ஊடாக யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் வசிப்போர் மற்றும் உள்ளூரில் இடம்பெயர்ந்து திரும்பிவந்தோருக்கான யுத்தத்திற்கு பின் சமூகங்களின் வறுமையை குறைத்து வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் ஆரம்ப குறிக்கோளாக உள்ளது.

செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 2.42 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 2 மில்லியன் அல்லது 83 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கி ஊடாக வறுமை குறைப்பிற்கான ஜப்பான் நிதியத்தால் (ஜேஎவ்பிஆர்) நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது ஐ.அ.டொலர் 0.26 மில்லியன் அல்லது 11 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டதுடன் இருக்கின்ற மிகுதி ஐ.அ.டொலர் 0.16 மில்லியன் அல்லது 6 சதவீதம் சமூக பங்களிப்புகள் ஊடாக நிதியளிக்கப்பட வேண்டும். செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2011 ஆகஸ்ட் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2014 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென்று பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் படி தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். இந்த பொறுப்பு நிதிக்கூற்றுக்கள் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைத்தல், அமுல்ப்படுத்தல், பேணுதல் மற்றும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தல் அச்சந்தர்ப்பத்தில் பொருத்தமான கணக்கீட்டு மதிப்பீடுகளைத் தயாரித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு

இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டு இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கட்டுநிதி நிதியக் கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

(ஏ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 3. அபிப்பிராயம்

--------------------

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 5 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொளள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(ஈ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக் கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்ட செலவினம் ரூபா 69,320,374 ஆனதுடன் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான திரண்ட செயற்திட்ட செலவினம் ரூபா 72,776,252 ஆகும். மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செலவினம் மற்றும் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே காட்டப்படுகின்றது.

| விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| சிவில் வேலைகள் | 28,928,473 | - | 28,928,473 |
| அலுவலக உபகரணங்கள் | 142,729 | 2,010,040 | 2,152,769 |
| மோட்டார் வாகனங்கள் | 13,211,940 | - | 13,211,940 |
| பயிற்சி செயலமர்வுகள் | 656,906 | - | 656,906 |
| வடிவமைப்பிற்கான ஆலோசனை சேவைகளும் மேற்பார்வையும் | 15,016,612 | - | 15,016,612 |
| சமூக படமாக்கலிற்கான ஆலோசனை சேவைகள் | 222,900 | - | 222,900 |
| செயற்திட்ட முகாமைத்துவம் | 11,140,814 | 1,445,838 | 12,586,652 |
| மொத்தம் | 69,320,374 | 3,455,878 | 72,776,252 |

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கட்டுநிதி நிதிய கணக்கின் தொழிற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

| | ஐ.அ.டொலர் | ரூபா |
|---|---|---|
| 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 61,649 | 7,839,369 |
| கூட்டுக: மீளளிப்புகள் | 149,842 | 19,629,874 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் | - | 271,183 |
| | 211,491 | 27,740,426 |
| கழி: பற்றுதல்கள் | 148,967 | 19,565,207 |
| 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி | 62,524 | 8,175,219 |

## 5. கணக்காய்வு அவதானிப்புகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் ஆறு மாதங்களிற்குள் கொடையளிக்கும் முகவருக்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2014 ஆகஸ்ட் 21 இலேயே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) சமுதாய அடிப்படை அமைப்புக்களின் உறுப்பினர்களிற்கு செலுத்த வேண்டிய ரூபா 368,280 கூட்டு மொத்தத் தொகை 2013 திசெம்பர் 31 வரையிலும் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் உள்ளகக் கணக்காய்வால் செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரட்டிய பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நிதியளிப்பு மூலம் | மானிய உடன்படிக்கை படி வழங்கப்பட வேண்டுமென உடன்பட்ட தொகை | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | பயன்படுத்திய நிதிகள் - 2013 ஆம் ஆண்டின் போது | பயன்படுத்திய நிதிகள் - 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ஐ.அ.டொலர் மில் | ரூபா மில் |
| ஜேஎவ்பிஆர் | 2.00 | 221.70 | 90.00 | 59.31 | 0.47 | 61.75 |
| இலங்கை அரசாங்கம் | 0.26 | 28.82 | 10.00 | 10.01 | 0.08 | 11.03 |
| சமூகப் பங்களிப்பு | 0.16 | 17.74 | - | - | - | - |
| மொத்தம் | 2.42 | 268.26 | 100.00 | 69.32 | 0.55 | 72.78 |

செயற்திட்ட காலப்பகுதி 29 மாதங்கள் கடந்த போதிலும் செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த மானியங்களில் செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 வரை 29.64 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 72,776,252 ஐ பயன்படுத்தியிருந்தது. ஆதலால், செயற்திட்டத்தின் மிகுதி 21 மாத காலத்தின் போது ஐ.அ.டொலர் 177,845,178 ஆன மிகுதித் தொகையின் பயன்பாடு ஐயத்திற்கிடமாக உள்ளது.

### 6.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டமானது 2014 யூன் 30 இல் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட போதிலும், செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 40 சதவீதம் மற்றும் 25.72 சதவீதமாக இருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நெடுந்தீவில் சரபிடியில் கிணறு ஒன்றின் நிர்மாணத்தின் 90 சதவீதம் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், அத்திகதியில் உள்ளவாறு அவ்வேலையின் 40 சதவீதம் மாத்திரமே பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(இ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட செயற்திட்டத்தின் 24 நடவடிக்கைகளில், 19 நடவடிக்கைகளின் கீழான வேலைகள் மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டின் போதே தொடங்கப்பட்டிருந்தது.